**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>**

முன்னிலை:- திருமதி வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2021-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் நாள் வியாழக்கிழமை

***<u>இடைமனு எண். 380/2019 in அசல் வழக்கு எண்: 243/2015</u>***

1. ஜெயலட்சுமி
2. செல்வி
3. தங்கராஜ் … மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. தங்கமணி
2. பன்னீர்செல்வம்
3. செல்வி
4. ஆர்.அன்பழகன்
5. ராமசாமி (இறந்துவிட்டார்)
6. சாரங்கபாணி
7. வீரமுத்து
8. கிருஷ்ணமூர்த்தி
9. தண்டபாணி ............ எதிர்மனுதாரர்கள்
10. இளவரசன் /10 முதல் 15 எதிர்மனுதாரர்கள்
11. அண்ணாமலை /Proposed defendants
12. அப்பாதுரை
13. அரிகிருஷ்ணன்
14. கலைச்செல்வி
15. இந்திரா

இந்த மனுவானது இன்று என்முன்னர் முடிவான விசாரணைக்காக வந்தபோது மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.ஏ.கே.என்.நடராஜன், அவர்கள் முன்னிலையாகியும். 6 மற்றும் 9 ம் எதிர்மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.டி.மகேஷ் அவர்கள் முன்னிலையாகியும், 2, 3, 7, 8ம் எதிர்மனுதாரர்களுக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு. ஏ.சம்பந்தம் அவர்கள் முன்னிலையாகியும். 4 எதிர்மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.கே.ராமதாஸ் அவர்கள் முன்னிலையாகியும், 5ம் எதிர்மனுதாரர் இறந்தும், 1, 10 முதல் 15 எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற ஆஜரின்மையால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இரு தரப்பையும் கேட்டறிந்து வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்....

<u>உத்தரவு</u>

அசல் வழக்கில் இறந்த 5ம் பிரதிவாதிக்கு 4 மற்றும் 10 முதல் 15 எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாகவும், அசல் வழக்கில் 4 மற்றும் 10 முதல் 15 பிரதிவாதிகளாகவும் சேர்த்துக்கொண்டு தாவாவை மேல்நடத்த மனுதாரர் தரப்பில்

உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை கட்டளை 22 விதி 4ன் கீழ் தாக்கல் செய்த மனு.

2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-

இந்த மனுவின் 2ம் மனுதாரர் அசல் வழக்கில் 2ம் வாதி என்றும், 1 மற்றும் 3 வாதிகளுக்காகவும் இந்த வழக்கை தான் கவனித்து வருவதாகவும், வழக்கு சொத்துக்களில் முதல் வாதிக்குள்ள ஆயுள் பரியந்தம் வரை அனுபவித்து கொள்ள உரிமை குறித்து தீர்மானிக்கவும், 1ம் வாதி ஆயுளுக்கு பிறகு பொதுவில் பிரிபடாத தாவா சொத்தக்களில் 2/3 வீதம் பாகம் விதம் பிரிவினை செய்து 2 மற்றும் 3 வாதிகளுக்கு allot செய்யவும் தனி சுவாதீனம் கொடுக்கவும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கும் தானும் 1 மற்றும் 3 வாதிகளும் சேர்ந்து பிரதிவாதிகள் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா நிலுவையில் இருந்து வருகிறத நிலையில் 5ம் பிரதிவாதியான ராமசாமி என்பவர் 16.10.2019ல் இறந்துவிட்டார் என்றும், அவருக்கு 4ம் எதிர்மனுதாரர் மற்றும் 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் மகன்கள் என்றும், 14, 15 எதிர்மனுதாரர்கள் மகள்கள் என்றும் அவர்கள் இறந்த 5ம் பிரதிவாதிக்கு சட்டப்படியான வாரிசுகள் என்றும், மேற்படி 4ம் எதிர்மனுதாரர் ஏற்கனவே இந்த வழக்கில் 4ம் பிரதிவாதியாக இருந்து வருகிறார் என்றும், அசல் வழக்கில் இறந்த 5ம் பிரதிவாதிக்கு 4 மற்றும் 10 முதல் 15 எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாகவும், அசல் வழக்கில் 4 மற்றும் 10 முதல் 15 பிரதிவாதிகளாகவும் சேர்த்துக்கொண்டு தாவாவை மேல்நடத்த மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 2,3,7,8 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடிக்குரியதென்றும், இந்த மனுவில் 10ம் எதிர்மனுதாரர் இளவரசன் என்றும் 13ம் எதிர்மனுதாரர் அரிகிருஷ்ணன் என்றும் குறிப்பிடுவதற்கு பதிலாக தவறாக 10 எதிர்மனுதாரர் பஞ்சநாதன் என்றும் 13ம் எதிர்மனுதாரர் அறிவழகள் என்றும் குறிப்பிட்டு மேற்படி கலைச்செல்வி இந்திரா ஆகிய இரு வாரிசுதாரர்களை மனுவில் சேர்க்காமல் போடப்பட்டிருக்கும் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரரின் உறுதிமொழி ஆவணம் தெளிவாக இல்லை என்றும் vague ஆக உள்ளது என்றும், இறந்து போன 5ம் எதிர்வாதிக்கு சேர்க்க வேண்டும் என்ற வாரிசுதாரர்கள் அவருக்கு என்ன உறவு என்று சொல்லப்படவில்லை என்றும், எனவே இம்மனு தள்ளுபடிக்குரியது என குறிப்பிட்டுள்ளார்.

4. <u>6, 9ம் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த ஆட்சேபனையின் சுருக்கம்:</u>

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி தள்ளுபடிக்குரியது என்றும், மனுதாரர் தனது அபிடவிட்டில் காலஞ்சென்ற 5ம் பிரதிவாதி இராமசாமிக்கு 4ம் பிரதிவாதி அன்பழகன் மற்றும் 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் மட்டுமே வாரிசுதாரர் என்று குறிப்பிட்டுள்ளார் அது தவறு என்றும், காலஞ்சென்ற 5ம் பிரதிவாதிக்கு 4ம் பிரதிவாதி அன்பழகன் மற்றும் இளவரசன் அரிகிருஷ்ணன் என்ற மகன்களும், கலைச்செல்வி மற்றும் இந்திரா என்ற குமாரத்திகளும் உள்ளனர் என்றும், எனவே அவர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் போடப்பட்டுள்ள இம்மனுவானது தள்ளுபடிக்குரியது என்றும், எனவே இம்மனுவை செலவுடன் தள்ளுபடி செய்யுமாறு இந்த எதிர்மனுதாரர்கள் வேண்டுகிறார்கள் என்றும், மேலும் 5ம் பிரதிவாதி இறந்த நாளோ தேதியோ குறிப்பிட்டு சொல்லப்படவில்லை.

5. இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் தாக்கல் இல்லை.

6. இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது அசல் வழக்கானது விளம்புகை, பாகப்பிரிவினை, சொத்து சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு நிலுவையில் இருக்கும் போது 5ம் பிரதிவாதியான ராமசாமி என்பவர் 16.10.2019ல் இறந்துவிட்டார் என்றும், அவருக்கு 4ம் எதிர்மனுதாரர் மற்றும் 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் மகன்கள் என்றும், 14, 15 எதிர்மனுதாரர்கள் மகள்கள் என்றும் அவர்கள் இறந்த 5ம் பிரதிவாதிக்கு சட்டப்படியான வாரிசுகள் என்றும், மேற்படி 4ம் எதிர்மனுதாரர் ஏற்கனவே இந்த வழக்கில் 4ம் பிரதிவாதியாக இருந்து வருகிறார் என்றும், அசல் வழக்கில் இறந்த 5ம் பிரதிவாதிக்கு 4 மற்றும் 10 முதல் 15 எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாகவும், அசல் வழக்கில் 4 மற்றும் 10 முதல் 15 பிரதிவாதிகளாகவும் சேர்த்துக்கொண்டு தாவாவை மேல்நடத்த மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் ”*மனுவில் 10ம் எதிர்மனுதாரர் இளவரசன் என்றும் 13ம் எதிர்மனுதாரர் அரிகிருஷ்ணன் என்றும் குறிப்பிடுவதற்கு பதிலாக தவறாக 10 எதிர்மனுதாரர் பஞ்சநாதன் என்றும் 13ம் எதிர்மனுதாரர் அறிவழகன் என்றும் குறிப்பிட்டு மேற்படி கலைச்செல்வி இந்திரா ஆகிய இரு வாரிசுதாரர்களை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இறந்து போன 5ம் எதிர்வாதிக்கு சேர்க்க வேண்டும் என்ற வாரிசுதாரர்கள் அவருக்கு என்ன உறவு என்று சொல்லப்படவில்லை, காலஞ்சென்ற 5ம் பிரதிவாதிக்கு 4ம் பிரதிவாதி அன்பழகன் மற்றும் இளவரசன் அரிகிருஷ்ணன் என்ற மகன்களும், கலைச்செல்வி மற்றும் இந்திரா என்ற குமாரத்திகளும் உள்ளனர் என்றும், எனவே அவர்களை தரப்பினர்களாக*

*சேர்க்காமல் போடப்பட்டுள்ள இம்மனுவானது தள்ளுபடிக்குரியது"* என எதிர்மனுதாரர்கள் இம்மனுவிற்கு ஆட்சேபனை தாக்கல் செய்திருந்தாலும் மனுதாரர்கள் மேற்படி பிழைகளை திருத்தம் செய்து திருத்தப்பட்ட மனு தாக்கல் செய்துள்ளார்கள். எனவே இம்மனுவை நிராகரிப்பதற்கான குறிப்பிட்டு எந்த காரணமும் சொல்லப்படவில்லை. அசல் வழக்கில் அவசியமான தரப்பினர்கள் சேர்க்கப்படவில்லை என்றால் அதன் விளைவு எதிர்மனுதாரர்களுக்கே பாதகமாக அமையும் என்பதால் இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரர்கள் தாக்கல் செய்த இடைமனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 11.11.2021ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/- V.Geetha)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.